22-08-2024.
O.S.No. 357/2021

வா. சா. 2 கென்னடி அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :-

நான் 1ம் வாதி வரலட்சுமி, பிரதிவாதிகள் ஜெயராஜ் ஜெகந்நாதன் ஆகியோர்களின் சகோதரி வெள்ளையம்மாளின் மகன் என்றால் சரிதான். என் தாயார் 14.03.2019ம் தேதி காலமானார். என் தாயாருக்கு எந்த வருடம் திருமணம் நடந்தது என தெரியாது. என் அப்பாவின் ஊர் தேனி மாவட்டம், போடிநாயக்கன்பட்டி அருகே உள்ள விசுவாசபுரம் ஆகும். திருமணத்திற்கு பிறகு என் தாயார் வத்தலக்குண்டில் வாழ்ந்து வந்தார் என்றால் சரிதான். என் தாயார் ஆசிரியராக வேலை பார்த்தார். நான் வேலை பார்த்து வருகிறேனா என்றால் எனக்கு உடல் ஊனம் என்பதால் வேலை பார்க்கவில்லை. நான் திருப்பூரில் வசித்து வருகிறேன் என்றால் வேலை நிமித்தமாக அங்கே இருந்து வருகிறேன். நான் செக்யூரிட்டியாக வேலை செய்தேன். தற்போது உடல்நிலை காரணமாக வேலை செய்யவில்லை. என் தாயார் ஆசிரியராக பெருமாள்மலை, பெரியூர், பூலத்தூர், பண்ணைக்காடு ஆகிய ஊர்களில் வேலை பார்த்தார். நாங்கள் வத்தலக்குண்டில் படித்து வந்ததால் என் தாயார் வத்தலக்குண்டில் இருந்துதான் அந்த அந்த ஊர்களுக்கு சென்று வேலை பார்த்து வந்தார். சாட்சி தானாக கூறுகிறார் மலைப்பிரதேசம் என்பதால் அந்த அந்த ஊர்களில் தங்கி மாதம் ஒரு முறை வத்தலக்குண்டு வருவார். எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள முகவரியில்தான் என் தாயார் தங்கி இருந்தார் என்றால் சரிதான். என் தாயார் உயிருடன் இருந்த காலத்தில் பிரதிவாதிகளுடன் நல்ல பேச்சுவார்த்தையுடன் இருந்தார் என்றால் சரிதான். வேறு சண்டை சச்சரவு எதுவும் இல்லை. என் தாயார் இறக்கும்வரை பிரதிவாதிகளிடம் சொத்தில் பங்கு கேட்கவில்லை என்றால் சரியல்ல. கேட்டு வந்தார். என் அம்மா சொத்து கேட்டு பிரதிவாதிகளுக்கு அறிவிப்பு ஒன்றை அனுப்பி வைத்தார். என் தாயார் அறிவிப்பு அனுப்பி

10 வருடங்கள் இருக்கும் என்றால் சரிதான். தாவாச் சொத்தின் சர்வே எண் எனக்கு தெரியுமா என்றால் தாக்கல் செய்துள்ளேன். தற்போது தெரியவில்லை. தாவாச்சொத்தின் விஸ்தீரணம் 2 ஏக்கர். 2 ஏக்கர் 30 செண்ட் அளவில் இருக்கும். வத்தலக்குண்டில் உள்ள வீடு என் தாத்தா பச்சைமுத்து சேர்வை என் தாயாருக்கு வாங்கி கட்டிக்கொடுத்தார் என்றால் சரியல்ல. 1ம் வாதி வரலட்சுமி வீட்டுக்கும் தாவாச்சொத்துக்கும் இடையே எவ்வளவு தொலைவு இருக்கும் என்றால் 15, 20 மீட்டர் இருக்கும். 1ம் வாதிக்கும் என் தாத்தா வாங்கி கட்டிக்கொடுத்த வீடு என்றால் சரியல்ல. திருப்பூரில் சுமார் 10 வருடமாக இருந்து வருகிறேன். 1,2 பிரதிவாதிகள் 1995ம் வருடமே சொத்தைப்பொறுத்து அவர்களுக்குள் பாகம் பிரித்துக் கொண்டார்கள் என்றால் சரிதான். அவர்கள் பாகம் பிரித்து எழுதிக் கொண்டபோதே அந்த விவரம் எங்களுக்கு தெரியும் என்றால் சரியல்ல. தெரியாது. 10 வருடங்களுக்கு முன்பே சொத்தில் பங்கு கேட்டு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியபோது சொத்திற்கான வில்லங்கம் பார்த்தோமா என்றால் பார்க்கவில்லை. 1995ம் வருடத்தில் செய்து கொண்ட பாகப்பிரிவினைப்படி ஜெகந்நாதன் அவருக்கு கிடைத்த சொத்தில் ஒரு பகுதியை 2018ம் வருடம் அவரது மகன் ராஜசேகர் என்பவருக்கு தான செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அந்த தான செட்டில்மெண்ட் எழுதிய சமயத்திலேயே அந்த விவரம் எங்களுக்கு தெரியும் என்றால் தெரியாது. நிரூபண வாக்குமூலத்தில் வாதிகளாகிய நாங்களும் பிரதிவாதிகளும் தாவாச்சொத்துக்களை கூட்டாக அனுபவித்து வந்ததாக சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். ஆரம்பத்தில் கூட்டாக அனுபவித்து வந்தோம். அதன் பிறகு சொத்தை தனியாக பிரித்து எடுத்துக்கொண்டதால் கூட்டாக அனுபவிக்க முடியவில்லை. சொத்தை தனியாக பிரித்து எடுத்துக்கொண்ட விவரம் எனக்கு முன்பே தெரியும் என்றும் தற்போது வழக்கிற்காக தெரியாது என பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

தாவாச்சொத்தை என் தாத்தா பச்சைமுத்து சேர்வை உயிருடன் இருக்கும் காலத்திலேயே என் தாயார் வெள்ளையம்மாளுக்கும், 1ம் வாதி வரலட்சுமிக்கும் சீர்வரிசை செய்து, வீடும் கொடுத்து விட்டதால் தாவாச் சொத்தில் எங்களுக்கு எவ்வித பங்கும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. என் தாயார் அனுப்பிய அறிவிப்பு நகல் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கறிஞர் அறிவிப்பு 1ம் வாதி வரலட்சுமி அனுப்பிய அறிவிப்புதான் என்றும் என் தாயார் உயிருடன் இருந்தவரை என் தாத்தா என் தாயாருக்கு செய்யவேண்டிய அனைத்தையும் செய்து விட்டதால் எந்தவித வழக்கறிஞர் அறிவிப்பும் அனுப்பி வைக்கவில்லை என்றால் சரியல்ல. எங்களுக்கு தாவாச்சொத்தில் எவ்வித பாகமும் கிடைக்கத்தக்கதல்ல என்றும் எனவே தாவா தள்ளுபடியாகனும் என்றும் சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை - இல்லை

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2024.08.22 17:31:57 +0530

Principal District Judge,
Dindigul.